# குறைதீர்க்க வந்தவன்.

*************************************************************************

குறைதனை தீர்க்க விரைந்தோடி வருபவனே என்,

குறைகளைத் தீர்க்க விரைந்தோடி வருவாய் நீயே !

குறைதனை.....

நாதியற்று அன்று யானையும் மடுதனில்,
ஆதிமூலமே என உனை கதறி அழைத்திட ;

சோதிமூலமான சக்கரத்தால் முதலையை,

பாதியாக கொன்று வேழமதை காத்தவனே !

குறைதனை......

சிறந்த வீரர்கள் நிறைந்த சபைநடுவினிலே,

பிறந்த மேனியளாக்க கௌரவர் நினைக்க ;

பரந்தாமா என்று பாஞ்சாலியுமே அழைக்க,

பறந்தோடி வந்து அவள் மானம் காத்தவனே !

குறைதனை......

எங்கும் நிறைந்துளான் என பிரகலாதன் கூற,

இங்குளானா ஹரியென தந்தை தூணுதைக்க ;

சிங்கமாய் அத்தூணிருந்து வந்து இரணியனின்,

அங்கமிரண்டாக்கி பாலன் கூற்றை காத்தவனே !

குறைதனை.....